**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No.166/2021**

**நாள்.11.02.2026**

**பி.வா.சா. 1- முருகேசன்**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசார ணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன். வழக்குச் சொத்துக்கு தென்கடைசியில் வாதிக்குப் பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். வாதி சொத்துக்கு வடக்கில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டுக்கு வடக்குப் பகுதியில் காலிமனை உள்ளது அது எனக்குப் பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி காலிமனைக்கு வடக்கில் குளம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி குளம் மற்றும் காலிமனைக்கு இடையில் கிழமேலாக ரோடு உள்ளது என்றால் சரிதான். வாதி இடம் சர்வே எண்.297/2M ல் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 297/2M க்கு வடக்கில் எனது இடம் சர்வே எண் .297/2L1 மற்றும் 297/2L2 ல் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.297/2L1ல் எனது உடன்பிறந்த சகோதரர் பழனிச்சாமி வீடு உண்டு என்றால் சரிதான். மேற்படி பழனிச்சாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி பழனிச்சாமியின் மனைவி பெயர் விஜயா மகன் பெயர் ஆறுமுகச்சாமி என்றால் சரிதான். சர்வே எண். 297/2L2 ல் எனக்குப் பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 297/2M மற்றும் சர்வே எண். 297/2L1 மற்றும் L2 ற்கு மேற்கில் சர்வே எண். 297/2J உள்ளது என்றால் தெரியாது காலியிடம் எதுவும் கிடையாது. நீதிமன்றத்திலிருந்து ஆணையர் வந்து தபசில் சொத்தை அளந்தார் அப்போது நான் இருந்தேன் என்றால் சரிதான். எனது இடத்திற்கும், வாதி இடத்திற்கும் மேற்கில் காலியிடம் இருப்பதாக ஆணையர் சொல்லியிருந்தார் என்றால் காலியிடம் இருந்ததாக சொல்லவில்லை எனது வீட்டை தான் அளந்தார்கள். எனது இடத்திற்கு வடக்கில் உள்ள குளத்தில் இருந்து எனது வீட்டின் கேட் வரை காலிமனையாக உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் கேட் மற்றும் காலிமனைக்கு மேற்கில் யார் இடம் என்றால் சுப்பையா நாடார் வகையறா, செல்லையா நாடார் வகையறா, என் வீட்டிற்கு மேற்கில் கைலாச நாடார் வகையறா.

கைலாச நாடார் வகையறாவிற்கு தெற்கில் யார் இடம் என்றால் ஆறுமுகச்சாமி நாடார் வகையறா. எனது வீட்டின் கேட் மற்றும் அதற்கு தென்புறம் உள்ள கட்டிடத்தை இடிக்கவேண்டும் என வாதி பரிகாரம் கேட்டிருந்தார் என்றால் ஆமாம் கட்டிடம் இரண்டும் ஒன்றாக கட்டியது. வாதி இடித்துக்கொடுக்க வேண்டும் என கேட்கும் கட்டிடமும், எனது வீடும் ஒரே காலகட்டத்தில் கட்டப்பட்டதாக நான் சொல்கிறேன் என்றால் ஆமாம். வாதி இடித்துக்கொடுக்க வேண்டும் என கேட்கும் கட்டிடமும், வழக்கு 3 வது தபசில் கட்டிடமும் வேறு வேறு காலகட்டத்தில் கட்டப்பட்டவை என்றால் சரியல்ல. வழக்கு 3 வது தபசில் கட்டிடத்தில் இருந்து தெற்கே காலிமனையாக உள்ளது என்றால் சரிதான். வழக்கு 3 வது தபசில் கட்டிடத்தில் இருந்து தெற்கே காலிமனையாக உள்ள இடத்திற்கு மேற்கில் ஆறுமுகச்சாமி நாடார் வீடும், பொன்னுச்சாமி நாடார் வகையறா வீடும் உள்ளது என்றால் சரிதான். ஆறுமுகச்சாமி நாடார் சர்வே எண்.297/2M ன் தெற்கு அற்றத்தில் இருந்து வடக்காக அவரது இடம் முடியும் வரை காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளார் என்றால் சரிதான். வடக்கே உள்ள குளத்திலிருந்து எனது வீட்டின் கேட் வரை உள்ள காலிமனைக்கு மேற்குப்புறத்திலும், கேட் மற்றும் 3 வது தபசில் சொத்தின் மேற்குப்புறத்திலும் யாருடைய வீடு உள்ளது என்றால் வடகடைசியில் எனக்கு பாத்தியப்பட்ட கட்டிடம் உள்ளது, அதற்கு அடுத்து செல்லையா நாடார் வகையறா கட்டிடம், அதற்கு அடுத்து சுப்பையா நாடார் வகையறா, கைலாச நாடார் வகையறா. மேலே சொன்ன 5 நபர்களுடைய வீட்டிற்கு கீழ்புறத்திலும், சர்வே எண்.297/2M மற்றும் சர்வே எண்.297/2L1 மற்றும் L2 க்கு மேல்புறத்தில் உள்ள இடம் சம்பந்தமாகவும், பாதையா இல்லையா எனக்கும் வாதிக்கும் பிரச்சனை என்றால் சரிதான். மேலே சொன்ன 6 நபர்களுடைய வீடு மற்றும் வாதி மற்றும் எனது வீட்டிற்கு ஆதியில் உரிமையாளர் சந்திரசூரியபிள்ளை என்றால் சரிதான். சர்வே எண்.297/2M ல் உள்ள வாதி சொத்தை யாரிடம் இருந்துகிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. வாதியினுடைய ஆவணம் சம்பந்தமாக கேள்விகள் கேட்டால் எனக்கு சொல்லமுடியாது என்றால் சரிதான்.

சந்திரசூரியபிள்ளை தென்வடல் பாதைக்கு கிழக்கு என வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் அப்பா பெயர் ஆறுமுகச்சாமி நாடார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.10 சர்வே எண்.297/2L1 மற்றும் L2 சொத்தினை கிரையம் வாங்கியதற்கான எனது இடத்திற்கான ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.10 ல் என்ன எல்கை சொல்லப்பட்டுள்ளது என்றால் சங்கரலிங்கம் புஞ்சை வகையறாவிற்கும் தெற்கு, தங்கவிநாயகம் பிள்ளை இடத்திற்கும் மேற்கு, தென்வடல் பாதைக்கும் கிழக்கு, இன்று நான் காளியப்ப நாடாருக்கு கிரையம் கொடுக்கும் இடத்திற்கு வடக்கு என சொல்லப்பட்டுள்ளது. மேற்படி காளியப்ப நாடாரிடம் இருந்து வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் வாங்கியிருப்பார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 என் அப்பா கிரையம் பெற்ற ஆவணம் என்றால் இல்லை என் அண்ணன் பழனிச்சாமி கிரையம் பெற்ற ஆவணம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 ல் கண்ட சொத்து சர்வே எண்.297/2L1 மற்றும் L2 க்கு வடக்கில் உள்ள சொத்து என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 ல் எல்கையில் ரோட்டுக்கும் கிழக்கு, 1வது அயிட்ட சொத்துக்கு வடக்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் சேர்ந்தமரம் ரோட்டுக்கும் கிழக்கு என சொல்லப்பட்டுள்ளது . சேர்ந்தமரம் ரோட்டுக்கும் கிழக்கு என என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 ல் இல்லை என்றால் சரிதான். வாதி இடத்திற்கு வடக்கில் உள்ள சர்வே எண்.297/2L1 மற்றும் L2 சொத்துக்கள் வா.சா.ஆ.10 மற்றும் 11 மூலமாக எனக்குப் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.297/2L1 மற்றும் L2 சொத்துக்கள் சம்பந்தமாக வேறு பத்திரங்கள் கிடையாது என்றால் சரிதான். எனக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் வா.சா.ஆ.10 மற்றும் 11 மூலமாக எனக்குப் பாத்தியப்பட்டது என ஏன் எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் சொல்லியிருந்தேன். மேற்குப்பக்கம் பாதை என காண்பித்து எனது முன்னோர்கள் வா.சா.ஆ.10 மற்றும் 11 மூலமாக இடத்தை வாங்கியுள்ளார்கள் அதனால் தான் வா.சா.ஆ.10 மற்றும் 11 ஆவணத்தை பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட நீ.ம.சா.ஆ.2 சர்வேயர் வரைபடத்தை காண்பித்து கேள்விகள் கேட்டால் என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியும். நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் சர்வே எண்.297/2M, சர்வே எண்.297/2L1 மற்றும் L2 காட்டப்பட்டுள்ளது என்றால் காட்டப்பட்டுள்ளது அது பற்றி விளக்கம் சொல்லமுடியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.297/2M, சர்வே எண்.297/2L1 மற்றும் L2 இருந்து நேர் மேற்காக செல்லமுடியாது என்றால் என்னுடைய சொத்திலிருந்து செல்ல முடியாது வாதி சொத்திலிருந்து தெற்கு பக்கம் மேல்பக்கமாக செல்லமுடியும். வாதி சொத்திலிருந்து தெற்கு பக்கம் மேல்பக்கமாக செல்லமுடியும் என நான் சொல்லக்கூடிய இடம் சந்திரசூரியபிள்ளைக்கு பாத்தியப்பட்ட இடம் கிடையாது என்றால் அது பஞ்சாயத்து ரோடு. நான் சொல்லக்கூடிய பஞ்சாயத்து ரோடு பொன்னுச்சாமி நாடார் வீட்டிற்கு தெற்குப் பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ரோடு சர்வே எண்.297/2M ல் வந்து இணையாது என்றால் சரியல்ல இணையும். மேற்படி ரோடு சர்வே எண்.297/2M ல் வந்து இணையும் என எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் இணையும். என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தின்படி மேற்படி ரோடு சர்வே எண்.297/2M ல் வந்து இணையும்படி ரோடு கிடையாது என்றால் இணையும். சர்வே எண்.297/2M க்கு தெற்கில் உள்ள உரிமையாளரால் கற்கள் ஊன்றி வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. சர்வே எண்.297/2M லிருந்து தெற்கில் செல்ல பாதை கிடையாது அதை தெரிந்துகொண்டு நான் வேலி இருப்பது பற்றி தெரியாது என்றும், நீ.ம.சா.ஆ.2 வரைபடம் பற்றி தெரியாது என்றும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.297/2L1 மற்றும் L2 ல் நான் எந்த வருடம் வீடு கட்டினேன் என்றால் 1980 ல். மேற்படி வீட்டிற்கு பஞ்சாயத்து தீர்வை போட்டுள்ளேனா, மின் இணைப்பு உண்டா என்றால் ஆமாம். சர்வே எண்.297/2L1 மற்றும் L2 ல் 1980 ல் வீடு கட்டியதற்கும், மேற்படி வீட்டிற்கு பஞ்சாயத்து தீர்வை, மின் இணைப்பு இருப்பதற்கும் எந்த ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3 வது தபசில்சொத்து மேற்படி வீடு கட்டடப்பட்ட காலத்தில் கட்டடப்பட்டதா என்றால் ஆமாம் 1980 ல் கட்டிவிட்டேன். சர்வே எண்.297/2L1 மற்றும் L2 ல் நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் வீடு இருப்பதாக ஆணையர் காட்டியுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.297/2L1 மற்றும் L2 மற்றும் சர்வே எண்.297/2M க்கு மேற்கில் சர்வே எண்.297/2M ன் தெற்கு அற்றத்தில் இருந்து எனது வீட்டிற்கு வடபுறம் உள்ள குளம் வரை காலிமனையாக ஆணையர் புல வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது கட்டிடம் இல்லை என்றால் வரைபடத்தில் கட்டிடம் இல்லை ஆனால் பூமியில் 3 வது தபசில் கட்டிடம் உள்ளது. சர்வே எண்.297/2L1 மற்றும் L2 கட்டடப்பட்ட சமயத்தில் 3 வது தபசில் கட்டிடம் கட்டடப்படாததால் தான் நீ.மசா.ஆ.2 புல வரைபடத்தில் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. 3 வது தபசில் கட்டிடத்திற்கு கதவு எண் என்ன என்றால் கதவு எண் 8/123. 3 வது தபசில் கட்டிடத்திற்கு தீர்வை ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் எல்லாம் ஒரே வீடு தான் தனியாக தீர்வை கிடையாது. சர்வே எண்.297/2L1 மற்றும் L2 கட்டிடம் கட்ட பஞ்சாயத்தில் அப்ரூவல் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கவில்லை. சர்வே எண்.297/2 ல் உள்ள மொத்த இடமும் முதலில் புஞ்சையாக இருந்தது பின்னர் நத்தமாக மாற்றப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.297/2L1 மற்றும் L2 புஞ்சையாக இருக்கும்போது என் அப்பா பெயருக்கு பட்டா உண்டு என்றால் சரிதான். நத்தமாக மாறியபிறகு யார் பெயருக்கு பட்டா உள்ளது என்றால் எனது அண்ணன் பெயரில். மேற்படி இரண்டு பட்டாக்களும் என் கைவசம் உண்டு என்றால் சரிதான். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால் சரிதான். மேற்படி இரண்டு பட்டாக்களை அடுத்த முறை நீதிமன்றம் வரும்போது கொண்டு வரலாமா என்றால் 1 வாரம் கால அவகாசம் கொடுத்தால் தாக்கல் செய்யலாம்.

**<u>வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.11 17:46:11 +0530